சார்பு நீதிமன்றம், செய்யார், திருவண்ணாமலை மாவட்டம்.

முன்னிலை-**திரு.சி.குமாரவர்மன், எல்.எல்.எம்.,**

சார்பு நீதிபதி, செய்யார்.

2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், 03 ம் நாள் புதன்கிழமை

**<u>அசல் வழக்கு எண். 99/2022</u>**

**<u>CNR No.TNTM04-000284-2022</u>**

E. ரோகினி ........வாதி

.......எதிராக.......

பச்சையப்பன் ........பிரதிவாதி

இவ்வழக்கு என் முன்பாக 21.07.2022 இன்று விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. G.அசோக் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி வழக்கின் அழைப்பாணையை பெற்றுக்கொண்டும் அழைத்தும் ஆஜராகததால் பிரதிவாதிக்கெதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. வாதி தரப்பு வாதுரைகளை கேட்டும், வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

வாதிக்கு பிரதிவாதி வழக்குத்தொகை ரூ. 5,95,000/- மற்றும் பின் வட்டியும், இவ்வழக்கின் செலவுத் தொகையும் செலுத்தக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்காகும்.

1. <u>வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்</u>-

வாதியிடம் பிரதிவாதி 04.01.2019 ஆம் தேதி மருத்துவ செலவிற்காக ரூ.3,50,000/-ம் கடன் பெற்றுக்கொண்டு, அதற்கு பிணையாக பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தை வாதி பெயருக்கு அடமானப் பத்திரம் எழுதி பத்திரப் பதிவு செய்து கொடுப்பதாக நமபகம் கூறி, வாதி பெயருக்கு ரூ.100/- முத்திரைதாளில் ஒரு கடன் பத்திரம் எழுதி ரூ.100/- க்கு வட்டி ரூ.2.00 வீதம் வட்டி கொடுப்பதாக எழுதிக் கொடுத்துள்ளார். அதன்பிறகு பிரதிவாதி கூறியவாறு

பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தை வாதி பெயருக்கு அடமானம் எழுதி பத்திரப்பதிவு செய்து தருமாறு கேட்டார். ஆனால் பிரதிவாதி அவ்வாறு செய்யாமல் காலம் கடத்தி வருகின்றார். வாதி பலமுறை பிரதிவாதியிடம் கடன் தொகையை திருப்பி செலுத்துமாறு கோரியும் பிரதிவாதி கடன் தொகையை திருப்பி செலுத்தவில்லை. வாதி கடன் தொகையை திருப்பி செலுத்தகோரி பிரதிவாதிக்கு 17.09.2021 ஆம் தேதி அறிவிப்பு அனுப்பினார். பிரதிவாதி அறிவிப்பினை பெற்றுக்கொண்டும் கடன்தொகையை திருப்பி செலுத்தவில்லை. ஆதலால் கடன் தொகையை வசூலிக்க வழக்கு தாக்கல் செய்துள்ளதாக வாதி வழக்குரையில் கூறியுள்ளார்.

2. பிரதிவாதி வழக்கின் அழைப்பாணையை பெற்றுக்கொண்டும் அழைத்தும் ஆஜராகததால் பிரதிவாதிக்கெதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

3. இவ்வழக்கில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதிகள் என்னவென்றால்,

1. வழக்கில் கோரியுள்ள ரூ.5,95,000/- ம் மற்றும் பின்வட்டி வாதிக்கு அளிக்கத்தக்கதா?

2. வேறு என்ன பரிகாரம் வாதிக்கு அளிக்கத்தக்கது?

4. வாதி தரப்பில் வாதி திருமதி. ரோகினி வா.சா.1, சாட்சியாக விசாரிக்கப்பட்டு, 04.09.2019 தேதிய கடன் பத்திரம் வா.சா.ஆ.1, 17.09.2021 தேதிய அறிவிப்பு வா.சா.ஆ.2, தபால் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.3 என ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. <u>பிரச்சனை எண்</u>.1

வழக்கில் கோரியுள்ள ரூ.5,95,000/- ம் மற்றும் பின்வட்டி வாதிக்கு அளிக்கத்தக்கதா?

வாதியிடம் பிரதிவாதி 04.01.2019 ஆம் தேதி மருத்துவ செலவிற்காக ரூ.3,50,000/-ம் கடன் பெற்றுக்கொண்டு, அதற்கு பிணையாக பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தை வாதி பெயருக்கு அடமானப் பத்திரம் எழுதி பத்திரப் பதிவு செய்து கொடுப்பதாக நமபகம் கூறி, வாதி பெயருக்கு ரூ.100/- முத்திரைதாளில் ஒரு கடன் பத்திரம் எழுதி ரூ.100/- க்கு வட்டி ரூ.2.00 வீதம் வட்டி கொடுப்பதாக எழுதிக் கொடுத்துள்ளார். பிரதிவாதி அவ்வாறு செய்யாமல் காலம் கடத்தி வருகின்றார். வாதி பலமுறை பிரதிவாதியிடம் கடன் தொகையை திருப்பி செலுத்துமாறு

கோரியும் பிரதிவாதி கடன் தொகையை திருப்பி செலுத்தவில்லை. வாதி கடன் தொகையை திருப்பி செலுத்தகோரி பிரதிவாதிக்கு 17.09.2021 ஆம் தேதி அறிவிப்பு அனுப்பினார். பிரதிவாதி அறிவிப்பினை பெற்றுக்கொண்டும் கடன்தொகையை திருப்பி செலுத்தவில்லை. ஆதலால் கடன் தொகையை வசூலிக்க வழக்கு தாக்கல் செய்துள்ளதாக வாதி தரப்பில் வழக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

6. பிரதிவாதி வாதியிடம் 04.01.2019 ம் தேதி ரூ.3,50,000/- கடன் பெற்றுக்கொண்டு வா.சா.ஆ.1 கடன் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். வாதி பிரதிவாதியிடம் கடன் தொகையை திருப்பி செலுத்துமாறு கோரியும் பிரதிவாதி கடன் தொகையை திருப்பி செலுத்தாமல் இருந்து வந்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. வாதி அவரது வழக்கை வா.சா.1 சாட்சியம் மூலமாகவும் வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்கள் மூலமாகவும் மெய்ப்பித்துள்ளார். வாதியின் வழக்கை பிரதிவாதி மறுத்து வழக்கு முன்வைக்கவில்லை. ஆதலால் வாதி கோரியுள்ள ரூ.5,95,000/-ம் மற்றும் பின்வட்டி வாதிக்கு அளிக்கத்தக்கது என தீர்மானித்து பிரச்சனை எண்.1 க்கு தீர்வு காணப்படுகிறது.

7. <u>பிரச்சனை எண்.2</u>

வேறு என்ன பரிகாரம் வாதிக்கு அளிக்கத்தக்கது?

வாதி வா.சா.ஆ.2 அறிவிப்பு அனுப்பியவுடன் பிரதிவாதி கடன் தொகையை திருப்பி செலுத்தியிருந்தால் வாதி வழக்கு தாக்கல் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. பிரதிவாதி வாதிக்கு வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளார். ஆதலால் வழக்கு செலவுத்தொகை வாதிக்கு அளிக்கத்தக்கது என தீர்மானித்து பிரச்சனை எண்.2 க்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, வாதிக்கு பிரதிவாதி ரூ.5,95,000/-ம் அதில் ரூ.3,50,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தீர்ப்பாணை தேதி வரை ஆண்டுக்கு 12% வட்டியும் தீர்ப்பாணை தேதி முதல் தொகை செலுத்தும் நாள் வரை 6% வட்டியும் மற்றும் வழக்கு செலவுத்தொகையும் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு

அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2022ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 03 - ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

ஓம்/-சி.குமாரவர்மன்

சார்பு நீதிபதி,

செய்யார்.

வாதித் தரப்பு சாட்சிகள்

வா.சா.1. திருமதி. ரோகினி

வாதி தரப்பு சான்றவாணங்கள்

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 04.09.2019 | கடன் பத்திரம் |
| வா.சா.ஆ.2 | 17.09.2021 | அறிவிப்பு |
| வா.சா.ஆ.3 | - | தபால் ஒப்புதல் அட்டை |

பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் -

இல்லை.

ஓம்/-சி.குமாரவர்மன்
சார்பு நீதிபதி,
செய்யார்.